*4*

# நாம் ஜாக்கிரதையற்றுப் போகிறோமா?

## (2:1-4)

*எபிரெயர் 2:1-4ல் நாம், நமது முதல் நேரடியான "ஊக்கமூட்டுதலின் வார்த்தையைக்'' கொண்டிருக்கிறோம். இந்தச் செய்தியைப் பின்வருமாறு பொழிப்புரைக்க என்னை அனுமதியுங்கள்: வசனத்தைக் குறித்து ஜாக்கிரதையற்றுப் போய்விடாதீர்கள்!*

இவ்வசனப்பகுதி "ஆகையால்" என்ற சொற்றொடருடன் தொடங்குகிறது, இது இவ்வசனப் பகுதியை இப்புத்தகத்தில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளவற்றுடன் பிணைக்கிறது. இயேசு தேவனுடைய குமாரனாக *இருப்பதால்*, இயேசு தொழுதுகொள்ளப்பட வேண்டியவர் என்பதால், இயேசு எல்லாவற்றையும் சிருஷ்டித்தார் *என்பதால்* மற்றும் இயேசு எல்லாவற்றின்மீதும் ஆளுகை செய்கிறார் *என்பதால்*, "நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்" (வசனம் 1). (தமிழ் வேதாகமத்தில்) 4ம் வசனம் "கவலையற்றிருப்போமானால்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது. "விட்டு விலகுதல்'' மற்றும் "கவலையற்றிருப்போமானால்'' ஆகியவை ஜாக்கிரதையற்ற தன்மையைக் கருத்தாகத் தெரிவிக்கின்றன; இவ்விரு கருத்துக்களையும் ஒன்றாகக் கூறுவதற்கு நான், "ஜாக்கிரதையற்றிருத்தல்'' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறேன். வசனம், கிறிஸ்தவம் மற்றும் நமது ஆத்துமாக்கள் பற்றி ஜாக்கிரதையற்றவர்கள் ஆவதைத் தவிர்ப்பதற்கு நாம் அடிவைப்புகளை மேற்கொள்ள வேண்டும்!

### பாவம்

நமது அறிமுகப் பாடத்தில் நான், இந்த நிருபத்தின் தொடக்ககால வாசகர்கள் தங்கள் கிறிஸ்தவ வாழ்வை நன்கு தொடங்கி இருந்தனர், ஆனால் இப்போது விசுவாச விலக்கத்தின் அபாயத்தில் இருந்தனர் என்று கருத்துத் தெரிவித்திருந்தேன், கிறிஸ்தவத்தைக் கைவிட அவர்கள் உணர்வுடன் முடிவெடுத்தனர் என்பதற்கோ அல்லது ஒருநாள் அவர்கள் கோபம் அடைந்து வெளியேறி விட்டனர் என்பதற்கோ குறிப்பு எதுவும் இருப்பதில்லை. மாறாக நமது வசனப்பகுதியானது, அவர்கள் - நங்கூரம்[1] இல்லாத கப்பல் ஒன்று கடலில் *விலகிச் செல்லுவது* போன்று - விட்டு விலகிக்கொண்டிருந்தனர். ஆண்டுகளினூடே நான், பலர் விசுவாசத்தை விட்டு விலகிச் சென்றிருப்பதைக் கண்டிருக்கிறேன்.[2] சிலர், தாங்கள் கலவரம் அடைந்ததால் அவ்வாறு வெளியேறினர், ஆனால் பெரும்பான்மையானவர்கள், ஜாக்கிரதையற்றுப் போனதாலேயே விசுவாசம் அற்றவர்கள் ஆயினர். அவர்கள் விட்டு விலகிச்

*சென்றனர். 3ம் வசனத்தின் சொற்றொடரைப் பயன்படுத்துவதென்றால், அவர்கள் ஆத்துமாவைப் பாதுகாக்கக் கூடியவற்றைப் புறக்கணித்தனர்.*

*லூக்கா 15ல் உள்ள, காணாமற்போனவை பற்றிய உவமைகளில், காணாமற்போன ஆடு என்பதே முதல் விஷயமாக உள்ளது. சட்டப்படி, ஒரு ஆடு என்பது வெறுப்புநிறைந்த உயிரினமாக இருப்பதில்லை. அது மேய்ப்பனைப் பகைப்பதால் காணாமற்போவதில்லை. மாறாக அது தனது தலையை உயர்த்தி, மந்தையில் எஞ்சியுள்ளவைகள் பார்வையில் இல்லாது போவதைக் காணும் வரையிலும், ஒரு புல்வெளியில் இருந்து இன்னொரு புல்வெளிக்குத் தாண்டித் தாண்டி அலைகிறது. கடைசியில் அது காணாமற்போகிறது!*

*நவீன - காலத்தில் விட்டு விலகுதல், புறக்கணித்தல் மற்றும் ஜாக்கிரதையற்றுப் போகுதல் பற்றிய - அதன் பரிதாபகரமான விளைவுகளுடன் - பல உதாரணங்கள் தரப்பட முடியும்.[3] ஒரு திருமணமானது அதன் பங்காளர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ திருமணத்தைப் புறக்கணிப்பதால் அழிக்கப்பட முடியும். திருமணமாகி தமது துணைவர்களுக்கு உண்மையற்றுப் போகிறவர்கள், அவ்வாறு செய்ய திட்டமிடுவது அவசியமில்லை; சில வேளைகளில் அவர்கள் ஜாக்கிரதையற்றுப் போய், வசனரீதியற்ற உறவுகளில் விலகிச் சென்று விடுகின்றனர்.*

*விசுவாசத்தை விட்டு விலகியிருப்பதாக நான் அறிந்துள்ள மக்கள், மனப்பூர்வமான தேர்ந்து கொள்ளுதலின் காரணமாக அவ்வாறு செய்வதில்லை, ஆனால் விலகிச் செல்லுதல் மற்றும் புறக்கணித்தல் காரணமாகவே அப்படிச் செய்கின்றனர் என்று நான் மீண்டும் கூறுகிறேன். இவர்களில் பலர் கிறிஸ்தவ வாழ்வை உற்சாகத்துடன் தொடங்கினர். பின்பு வழியில் ஏதோ ஒரு இடத்தில், அவர்கள் தாங்கள் "ஆதியில் கொண்டிருந்த அன்பை" விட்டுவிட்டனர் (வெளிப்படுத்தின விசேஷம் 2:4). ஒருகாலத்தில் தாங்கள் செய்திருந்தது போல இனியும் அவர்கள் (வேதாகமத்தை) படிப்பதில்லை. அவர்கள் அதிகமாக ஜெபிப்பதில்லை. அவர்கள் ஒருசில ஆராதனை ஊழியங்களைத் தவறவிடத் தொடங்கினர். அவர்கள் கர்த்தருக்கான ஊழியத்தில் செயல்துடிப்புடன் இருக்கவில்லை. அவர்கள் விட்டுவிலகத் தொடங்கினர். மெதுவாக ... மெதுவாக ... விட்டுவிலகி ... விட்டு விலகினர் ... ஆனால் நிச்சயமாகவே - கர்த்தரை விட்டு விலகினர்.*

## தனித்தன்மை

*தேவனிடத்தில் இருந்து விட்டு விலகுதல் மற்றும் அவரது சித்தத்தைப் புறக்கணித்தல் ஆகியவை, கீழ்ப்படியாமை என்று கணக்கிடப்படும் அளவுக்கு நம்மை அதிர்ச்சி அடையச் செய்யாதிருக்கலாம், ஆனால் அதுவே முடிவு விளைவாக உள்ளது. வேண்டுமென்றே செய்யப்பட்ட செயலின் விளைவைப் போன்ற அதே விளைவுகளைப் புறக்கணித்தலும் கொண்டிருப்பது எவ்வாறு என்று காண்பிக்க உதாரணங்கள் தரப்பட முடியும். பல ஆண்டுகளுக்கு முன்பு, எனது மைத்துனரும் அவரது மனைவியும், தங்கள் அயல்வீட்டில், மனநிலை சரியில்லாத ஒரு பெண் தனது சிறு பெண்குழந்தையைக் கழுத்தை நெறித்துக் கொன்றதைக் கேள்விப்பட்டனர். அதே ஆண்டில் நாங்கள் அறிந்திருந்த ஒரு தாயார், உறங்கிக் கொண்டிருந்த வேளையில் அவரது குழந்தை நீரில் மூழ்கிப்போனது. ஒரு மரணம், மனநிலை சரியற்ற நிலையில் வேண்டுமென்றே நிகழ்த்தப்பட்டதாக*

இருந்தது. அதே வேளையில் இன்னொரு மரணம் புறக்கணித்தலின் விளைவாக இருந்தது, ஆனால் இவ்விரு விஷயங்களிலும் விளைவு ஒன்றாகவே இருந்தது: ஒரு குழந்தையின்பரிதாப மரணம்.

### கிறிஸ்துவின் வசனத்தைக் குறித்து ஜாக்கிரதையற்று இருத்தல்

*சுவிசேஷத்தைப் பற்றி* ஜாக்கிரதையற்று இருத்தலின் பரிதாபத்தின் மீதே நமது வசனப்பகுதி வலியுறுத்தம் செய்கிறது. முதலாவதாக இது *கிறிஸ்துவின்* வசனம் என்பதால், இது (ஜாக்கிரதையற்ற நிலை) பரிதாபமானதாக உள்ளது. எழுத்தாளர், "தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்தை" (வசனம் 2; காண்க நடபடிகள் 7:53; கலாத்தியர் 3:19) (பழைய ஏற்பாட்டை) "கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்ட" வசனத்துடன் (வசனம் 3) (புதிய ஏற்பாட்டுடன்) நேர்மாறாக ஒப்பிட்டார்.

"தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்தின்" கீழ், அதற்கு "விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை" வந்தது (வசனம் 2). ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கிய ஒரு மனிதர் கல்லால் எறிந்து கொல்லப்பட்டார் (எண்ணாகமம் 15:32-36). பரிசுத்தமான பேழையை உசியா என்பவர் தொட்டபோது, அவர் சாகும்படி அடிக்கப்பட்டார் (2 சாமுவேல் 6:3-7). தூதர்களிடமிருந்து வெளிப்படுத்தப்பட்டவற்றைக் காத்துக்கொள்வதில் அப்படிப்பட்ட தண்டனை அளிக்கப்பட்டது என்றால், "கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்ட" (வசனம் 3) பெரிதான இரட்சிப்பைப்[4] புறக்கணிப்பவர்களுக்கு என்ன நடக்கும்? என்று எழுத்தாளர் வியப்படைந்தார்.

### "உறுதியாக்கப்பட்ட" சுவிசேஷத்தைக் குறித்து ஜாக்கிரதையற்று இருத்தல்

இரண்டாவது, இது "*உறுதியாக்கப்பட்ட*" சுவிசேஷமாக இருப்பதால், இதைப் பற்றி ஜாக்கிரதை அற்றிருத்தல் பரிதாபமானதாக உள்ளது. இது "நமக்கு *உறுதியாக்கப்பட்டது*" (வசனம் 3) என்று எழுத்தாளர் வலியுறுத்தினார். வில்லியம் பார்க்ளே அவர்கள், தமது மொழிபெயர்ப்பில், கர்த்தரால் பேசப்பட்ட வசனத்தைப் பற்றிய குறிப்பில் "உறுதியாக்கப்பட்டது" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்.[5] நம்மில் பெரும்பான்மையானவர்கள், நாம் வாங்கும் பொருள்கள் உத்தரவாதம் கொண்டிருப்பதை விரும்புகிறோம்; அவைகள் நம்பிக்கைத் தன்மையை நிலைநாட்டுகின்றன. சுவிசேஷத்தைக் கர்த்தர் தாமே உறுதிப்படுத்துகிறார் என்பதால், அதன் போதனைகளுக்கு நமது நித்திய ஆத்துமாக்களை நாம் ஒப்புவிக்க முடியும்.

நமது வசனப்பகுதி, சுவிசேஷத்தின் அங்கீகாரத்துவத்திற்குச் சாட்சியளிக்கும் மூன்று சாட்சியங்களைப் பட்டியலிடுகிறது.

- இயேசு: "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு" (வசனம் 3).
- அப்போஸ்தலர்களும் ஏவுதல் பெற்ற மற்ற பேச்சாளர்களும்: "பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்" (வசனம் 3).
- தேவன் தாமே, அப்போஸ்தலர்களும் மற்றவர்களும்[6] செய்யும்படியாக்கிய அற்புதங்கள் மூலமாக: "அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும்

பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற" (வசனம் 4).[7]

கிறிஸ்துவின் வசனத்தை நாம் புறக்கணித்தால், அது எவ்வளவு பரிதாபமானதாக இருக்கும்! உறுதியாக்கப்பட்ட சுவிசேஷத்தை விட்டு கிறிஸ்தவர்கள் விலகிச் சென்றால் அது எவ்வாளவு பரிதாபமானதாக இருக்கும்!

## தீர்வு

விட்டு விலகுதலில் இருந்து நம்மை நாம் எவ்வாறு காத்துக்கொள்ள முடியும்? கவலையற்றிருத்தல் என்ற பாவத்திலிருந்து நம்மை நாம் எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள முடியும்? நமது வசனப் பகுதியின் தொடக்க வார்த்தைகளுக்குத் திரும்பிச் செல்லுங்கள்: "நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, *அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்*" (வசனம் 1; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நீல் லைட்ஃபூட் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> சபைகூடுகையில் அவர்கள் வந்தபோது (காண்க யாக்கோபு 2:2), அவர்கள் தங்கள் இருக்கைகளின் நுனியில் அமர்ந்து, தேவனுடைய வசனத்தைக் கேட்க ஆவலுடன் இருந்திருக்க வேண்டும். நீங்களும் நானும், வேத வகுப்பிற்கும் ஆராதனைக்கும் வரும்போது, மிகவும் அடிக்கடி நாம் - உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் - அரைமனதுடையவர்களாக இருக்கிறோம். ஆவிக்குரிய விஷயங்கள், நித்திய விஷயங்கள் ஆகியவற்றைக் குறித்து, நமக்கு மாபெரும் வலிவார்ந்த தன்மை தேவைப்படுகிறது![8]

நாம் வசனத்தைப் படிப்பது அவசியமாக உள்ளது. பின்பு நாம் அதன்மீது தியானம் செய்து, அது ஒருக்காலும் நம்மை விட்டு நழுவவிடாத படிக்கு அதை தொடர்ந்து மறுகண்ணோட்டம் இடவேண்டும்.[9] கடைசியாக நாம் வசனத்தை நடைமுறையில் இடுவது அவசியமாக உள்ளது.

தேவனின்றி இதை நாம் செய்ய முடியாது. அவர் நமக்கு உதவுவதாக வாக்களித்துள்ளார் (1:17, 18; மேலும் காண்க 4:14-16; 13:5ஆ, 6) என்பதற்காக நாம் எவ்வளவு நன்றி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்! இருப்பினும், நாம் செய்யக்கூடியதைச் செய்ய வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் எதிர் பார்க்கிறார். நமது தனிப்பட்ட பொறுப்பில் இருந்து நாம் தப்பிக்க முடியாது. விசுவாசத்தில் நிலைத்திருப்பதற்கு நாம், கர்த்தருடைய "பெரிதான இரட்சிப்பை" ஊக்கமாக விரும்பி முயற்சியை மேற்கொள்ள வேண்டும்!

## போதகருக்குக் குறிப்புகள்

KJV வேதாகமத்தில், 2:1ல், "விட்டு விலகுதல்" என்பதற்குப் பதிலாக "நழுவ விடுதல்" என்றுள்ளது: "lest ... we should let them slip" ["நாம் அவற்றை நழுவ விடாத படிக்கு"]. எனது எடையை நான் இழக்கும்போது, சிலவேளைகளில் எனது திருமண மோதிரம் எனது விரலில் இருந்து நழுவி விடுகிறது. எனது குடும்பத்தினர் ஆஸ்திரேலியாவில் வசித்தபோது, பல மாதங்களாக எனது மோதிரம் காணாமற்

போயிருந்தது. பின்பு ஒருநாள் நான் அதை, பால்காரர் பாலை விட்டுச் செல்லும் மரத்தின் கீழ் கண்டுபிடித்தேன். முன்பு ஒருநாள் காலையில். பால் பாட்டில்களை நான் எடுக்கச் சென்ற போது, அந்த மோதிரம் நழுவி விழுந்திருந்தது. நான் எனது திருமணப் பிணைப்பின் அடையாளமான அந்த மோதிரத்தை, கோபத்திலோ அல்லது வெறுப்பிலோ தூக்கி எறிந்திருக்கவில்லை; அது நழுவிச் செல்ல மாத்திரம் விட்டிருந்தேன். அது போன்றே, சிலர் தங்கள் விசுவாசம், தங்கள் உறுதிப்பாடு, தேவனுடன் தங்களுக்குள்ள உறவு ஆகியவை நழுவிப்போகும்படி விட்டு விடுகின்றனர்.

புறக்கணிக்கப்பட்ட வாய்ப்புகள் ஒருக்காலும் திரும்பவும் ஆதாயப்படுத்தப்பட இயலாது என்பதை வலியுறுத்த நீங்கள் விரும்பலாம். பழங்காலப் பழமொழி ஒன்று, "மூன்று விஷயங்கள் திரும்பி வருவதில்லை - பேசப்பட்ட வார்த்தை, எய்யப்பட்ட அம்பு மற்றும் இழந்துபோகப்பட்ட வாய்ப்பு" என்று கூறுகிறது.

---

குறிப்புகள்

[1]எபிரெயருக்கு எழுதிய நிருபம் நம்பிக்கையின் ஆவிக்குரிய நங்கூரத்தைப் பற்றிப் பின்பு பேசுகிறது (6:19). [2]"விசுவாசம்" என்பது தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் கிறிஸ்தவ வாழ்வு நடையைக் குறிக்கிறது (காண்க நடபடிகள் 14:22; 16:5; 1 கொரிந்தியர் 16:13). [3]நான் இங்கு இரண்டு உதாரணங்களை அளித்துள்ளேன், ஆனால் நீங்கள் வாழும் சமூகத்திற்குப் பொருத்தமான விவரிப்புகளைப் பயன்படுத்துங்கள். [4]"பெரிதான இரட்சிப்பு" என்பது, "இயேசு நம்மைப்போல ஆனது ஏன்?" என்ற அடுத்த பாடத்தில் கலந்துரையாடப்படுகிறது. [5]William Barclay, *The Letter to the Hebrews*, 3d ed., rev. and updated, The New Daily Study Bible (Louisville: Westminster John Knox Press, 2002), 24. [6]மற்றவர்கள் என்பது அப்போஸ்தலர்களின் கைகள் வைக்கப்பட்டவர்களைக் குறிக்கிறது (காண்க நடபடிகள் 8:17, 18). [7]வசனத்தை உறுதிப்படுத்துதல் என்பதே அற்புதங்களின் நோக்கம் என்பதைக் குறிப்பிட நீங்கள் விரும்பலாம். அது ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்டபின்பு, தொடர்ந்து உறுதிப்படுத்துதல் அதற்குத் தேவைப்படுவதில்லை. [8]Neil R. Lightfoot, ACU extension class on Hebrews taught in Fort Worth, Texas, 14 September 1985. [9]ஒரு தகவல் பயன்படுத்தப்பட்டிராதபோது, அது ஒருவரின் நினைவில் இருந்து நழுவிச் செல்லுதல் பற்றிய ஒரு விவரிப்பை உள்ளடக்குங்கள்.